**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை: செல்வி.A. யுகாதிமரியா, B.Com.L.L.B(Hons.,)**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை.**

**2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 12 ம் நாள் வியாழக்கிழமை**

**அசல் வழக்கு எண்.22/2020**

**இ.ம.எண்.06/2026**

ராமலிங்கம் **...மனுதாரர்/பிரதிவாதி**

**/எதிர்/**

வடிவேல் **..எதிர்மனுதாரர்/வாதி**

இம்மனு எனது முன்னிலையில் கடந்த 25.02.2026ம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.நாகேஸ்வரன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.M.செந்தில் அவர்கள் முன்னிலையாகியும் மற்றும் இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:

**உத்தரவு**

இம்மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6, விதி 1 உடனிணைந்த பிரிவு 151ன் கீழ் மனுதாரர்/பிரதிவாதியால், கடவூர் வட்டாட்சியரை மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதி தரப்பு சாட்சியாக அழைத்து தாவா சொத்தைப் பொறுத்து குறுக்கு விசாரணை மேற்கொள்ள அனுமதி வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர் மனுவின் சுருக்கம்:**

**2)** மனுதாரர் மேற்படி அசல் வழக்கின் பிரதிவாதியாவார். வாதி மேற்படி அசல் வழக்கை விளம்புகை பரிகாரத்திற்காக தாக்கல் செய்துள்ளார். தாவா

சொத்துக்கள் கரூர் மாவட்டம், கடவூர் வட்டம், பண்ணைப்பட்டி கிராமத்தில் புல எண்.706/9 மற்றும் புல எண்.706/10ற்கு கட்டுப்பட்ட சொத்துக்களாகும். இவ்வழக்கின் வாதி, தனது சொத்தின் உரிமையை நிலைநாட்ட வருவாய் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். மேற்படி வருவாய் ஆவணங்களின் பட்டா எண்.1040யைப் பொறுத்து உண்மைத்தன்மையை அறிவதற்காக, கடவூர் வட்ட வட்டாட்சியர் அவர்கள் தகுந்த வருவாய் ஆவணங்களுடன் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வேண்டியுள்ளது. இந்நிலையில், தற்போது பிரதிவாதி தரப்பு விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்த சூழ்நிலையில், மேற்படி தாவா சொத்திற்கு உள்ள பட்டா மற்றும் 'அ' பதிவேடு போன்றவைகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அதன் உண்மை தன்மை அறியப்பட்டால்தான் பிரதிவாதி தரப்பு வழக்கு கூடுதல் பலமாக இருக்கும் என்பதால், கடவூர் வட்ட வட்டாட்சியரை நீதிமன்றத்தில் வருவாய் ஆவணங்களுடன் சாட்சியம் அளிக்க உத்தரவிட வேண்டியது அவசியமான ஒன்றாகும். எனவே, இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்மனுவுரை ஆட்சேபணையின் சுருக்கம்:</u>**

**3)** மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் பொய்யானவை. கற்பனையானவை. இம்மனுவானது சட்டத்தின்படியும், நியாயத்தின்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. மனுவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் எதிர்மனுதாரரால் பொய் என மறுக்கப்படுகின்றது. அவற்றை மனுதாரரே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் ஆவார். தாவா சொத்தைப் பொறுத்த ஆவணங்களை, வாதி மேற்படி அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ளார் என்பது உண்மை. ஆனால், தாவா சொத்திற்கான பட்டா எண்.1040யைப் பொறுத்து, வாதிக்கு கிரையம் கொடுத்தவர் பெயரில் உள்ள மேற்படி பட்டாவைப் பொறுத்து மனுதாரர் ஆட்சேபனைகள் செய்துள்ளார். அதற்காக, கடவூர் வட்ட வட்டாட்சியருக்கு அழைப்பாணை அனுப்பி பிரதிவாதி

தரப்பில் மேற்படி பட்டா விவரங்கள் குறித்து விசாரணை செய்ய தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதல்ல.

4) மனுதாரர், அவர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் எவ்வகையான ஆட்சேபனைகளும் சொல்லவில்லை. ஆனால், எதிர்வழக்குரையில் ஆட்சேபனை செய்யாமல், தற்போது இம்மனுவை தாக்கல் செய்துள்ளது முற்றிலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. கடவூர் வட்ட வட்டாட்சியரை பிரதிவாதி தரப்பில் சாட்சியாக விசாரணை செய்ய மனுதாரர் தரப்பில் எவ்வித நியாயமான காரணம் எதுவும் கூறப்படவில்லை. இம்மனுவானது, தவறான சங்கதிகள் கொண்டு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உரிய காரணங்கள் எதுவும் இல்லாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது தள்ளுபடி செய்யத்தக்கதாகும்.

**<u>தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வி:</u>**

5) மனுதாரரின் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வியாகும்.

**<u>சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>**

6) இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியமும் இல்லை. ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**<u>தீர்வு:</u>**

7) இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கு கோப்புகளைப் பரிசீலனை செய்கையில், மேற்படி வழக்கானது எதிர்மனுதாரர்/வாதியால், தாவா சொத்தான பண்ணப்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள புல எண்.706/9 மற்றும் 706/10 ஆகிய நிலங்கள்

தனக்கு பாத்தியப்பட்டது என்றும், ஆனால், அவை பிரதிவாதியால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாகக் கூறி, மேற்படி ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பகுதியான 'இ' அட்டவணை சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சொத்தை, வாதிக்கு முழுமையாக பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கோரியும், அதன் தொடர் பரிகாரமாக பிரதிவாதியால் மேற்படி இடத்தில் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்பை அகற்றி சுவாதீனம் ஒப்படைக்க சுவாதீன ஒப்படைப்பு பரிகாரம் கோரியும், மேற்படி அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், பிரதிவாதியால் மேற்படி சங்கதிகள் அனைத்தும் மறுத்து அவரது எதிர்வழக்குரையில் புல எண்.706/5ல் உள்ள நிலத்தை தகுந்த மறுபயனுக்கு பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளதாகக் கூறி, வாதியின் இவ்வழக்கானது பிரதிவாதியால் மறுக்கப்பட்டுள்ளது.

**8)** மேலும், வாதி தரப்பில் வாதியானவர் வா.சா.1ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், வா.சா.1ன் குறுக்கு விசாரணையில் பிரதிவாதி தரப்பில் பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.3 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து, பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1 முதல் பி.வா.சா.3 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, பி.வா.சா.1ன் மூலம் பி.சா.ஆ.4 முதல் பி.சா.ஆ.7 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. தாவா சொத்திற்கான பட்டா ஆகியவை வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில், மேற்படி வருவாய் ஆவணங்களில் பட்டா எண்.1040யைப் பொறுத்து அதன் உண்மைத் தன்மையை அறிவதற்காக கடவூர் வட்ட வட்டாட்சியர் அவர்களை தகுந்த வருவாய் துறை ஆவணங்களுடன் இந்நீதிமன்றத்தில் சாட்சியாக அழைத்து பிரதிவாதி தரப்பில் விசாரணை செய்ய வேண்டி இம்மனுவானது பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**9)** மனுதாரர்/பிரதிவாதி தரப்பில், மேற்படி பட்டா எண்.1040யைப் பொறுத்தும், அதன் உண்மைத்தன்மையை அறிவதற்கு கடவூர் வட்டாட்சியரை அழைத்து

விசாரணை செய்வது அவசியம் என்று வாதிடப்பட்டது. மாறாக, எதிர்மனுதாரர் தரப்பில் தாவா சொத்தைப் பொறுத்து பட்டா மற்றும் இதர வருவாய் துறை ஆவணங்கள் வாதி தரப்பில் ஏற்கெனவே மேற்படி அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும், பிரதிவாதி மேற்படி பட்டா எண்.1040யைப் பொறுத்து எதிர் வழக்குரையில் எவ்வித ஆட்சேபனைகளும் செய்யாமல் தற்போது அதனை ஆட்சேபனை செய்து மேற்படி பட்டா மற்றும் இதர வருவாய் துறை ஆவணங்கள் பொறுத்து உண்மைத்தன்மை அறியும் பொருட்டு கடவூர் வட்டாட்சியரை அழைத்து சாட்சியாக விசாரிக்க தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு நிலை நிற்கத்தக்கதல்ல என்று கூறி வாதிடப்பட்டது.

**10)** இரு தரப்பு வாதங்களையும், வழக்கு கோப்புகளையும் நன்கு கவனமுடன் பரிசீலனை செய்கையில், தாவா சொத்தான பண்ணப்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள புல எண்.706/9 மற்றும் புல எண்.706/10 ஆகியவை வாதிக்கு பாத்தியப்பட்டதாக கூறி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், மேற்படி சொத்தில் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளதாகவும், பிரதிவாதியால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள பகுதி 'இ' அட்டவணையாக மேற்படி அசல் வழக்கில் காண்பித்து மேற்படி 'இ' அட்டவணை சொத்தைப் பொறுத்து விளம்புகை பரிகாரத்திற்காகவும், அதன் தொடர் பரிகாரமான சொத்தின் சுவாதீனம் ஒப்படைப்பு பரிகாரத்திற்காகவும், மேற்படி அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், மேற்படி அசல் வழக்கானது பிரதிவாதி தரப்பில் கூடுதல் சாட்சி விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. அவ்வாறு இருக்கும் நிலையில், இம்மனுவானது கடவூர் வட்டாட்சியரை பிரதிவாதி தரப்பில் சாட்சியாக அழைத்து மேற்படி தாவா சொத்திற்குரிய பட்டா எண்.1040யைப் பொறுத்து விசாரணை செய்யவும், அதன் உண்மைத்தன்மையை அறியவும், மேலும் தாவா சொத்திற்கான 'அ' பதிவேட்டு

விவரங்கள் பற்றி வட்டாட்சியரிடம் விசாரணை செய்யவும் அனுமதி வேண்டி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**11)** வாதி, தனது வழக்குரையில் தாவா சொத்து ஆதியில் அந்தோணிசாமி மற்றும் இருதயம் ஆகியோர்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும், பட்டா எண்.1040 அந்தோணிசாமி பெயரிலும், பட்டா எண்.332ல் இருதயம் என்பவர் பெயரிலும் பட்டாக்கள் ஏற்பட்டுள்ளதாகவும், அதன் அடிப்படையில் கடந்த 23.06.2017 அன்று பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் வாயிலாக கிரையம் செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டு கூறியுள்ளார். மேலும், தாவா சொத்தில் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்வதாக வாதியால் குற்றச்சாட்டானது வைக்கப்பட்டு இவ்வழக்கு பரிகாரமானது கோரப்பட்டுள்ளது. இந்நிலையில், பிரதிவாதி மேற்படி அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் பண்ணைப்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள புல எண்.706/5 என்ற நிலத்தை தகுந்த மறுபயன் கொண்டு தான் கிரையம் பெற்றுள்ளதாக குறிப்பிட்டு கூறியுள்ளார்.

**12)** மேலும், வாதியால் பிரதிவாதிக்கு எதிராக கூறப்பட்டுள்ள ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதற்கான குற்றச்சாட்டுகளை மறுத்து, மேற்படி எதிர்வழக்குரையை பிரதிவாதி தாக்கல் செய்துள்ளார். அவ்வாறு இருக்கும் நிலையில், தாவா சொத்தில் எவ்வகையிலும் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்று நிரூபணம் செய்யும் சட்டச்சுமையானது பிரதிவாதி தரப்பில் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. தாவா சொத்தில் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்பதை நிரூபணம் செய்யும் பொருட்டும், தாவா சொத்திற்கு பட்டா எண்.1040 மற்றும் அதன் 'அ' பதிவேட்டு விவரங்களின் உண்மைத்தன்மையை அறியும் பொருட்டும், கடவூர் வட்டாட்சியரை பிரதிவாதி தரப்பில் சாட்சிக்காக அழைத்து விசாரணை செய்ய பிரதிவாதியால் தாக்கல்

செய்யப்பட்டுள்ள இம்மனுவானது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக உள்ளது என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**13)** மேற்படி சங்கதிகளை நிரூபணம் செய்ய பிரதிவாதிக்கு தகுந்த வாய்ப்புகள் வழங்கவேண்டும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், மேற்படி அசல் வழக்கில் எழுந்துள்ள எழுவினாக்களைப் பொறுத்து தீர்மானம் செய்யும் பொருட்டு இம்மனுவில் கண்டுள்ள சாட்சியை அழைத்து பிரதிவாதி தரப்பில் விசாரணை செய்ய அனுமதிப்பது அவசியமானதாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், இம்மனுவை அனுமதிக்காவிட்டால் எதிர்மனுதாரரைவிட மனுதாரருக்கே அதிகப்படியான இழப்பு ஏற்படும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், இம்மனுவை அனுமதிப்பதன் மூலம் எதிர்மனுதாரருக்கு மனுவில் கண்ட சாட்சியை அனைத்து வகையிலும் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

**முடிவாக,**

மேற்சொன்ன காரணங்களுக்காக இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகின்றது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவானது, என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பு எடுக்கப்பட்டு, பின்பு கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12ம் தேதியாகிய இன்று அவையறிய பகிரப்பட்டது.

YUGHATHY MARIYA

Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.03.12 14:21:55 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**குளித்தலை**

| | | |
|---|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் | – | இல்லை |
| எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் | – | இல்லை |

YUGHATHY MARIYA

Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.03.12 14:22:02 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**குளித்தலை**